12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் அறிவிப்பு

# தேர்தல் ஆணையம் பா.ஜ.க. கைப்பாவையாகக் கூடாது!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

திருவனந்தபுரம், அக். 30 -

12 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை (SIR) மேற்கொள்ளப் போவதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது, ஜனநாயக நடைமுறைக்கு விடப்பட்டுள்ள சவால் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறியுள்ளார். தேர்தல் ஆணையம், ஒன்றிய ஆளும் கட்சியின் கைப்பாவை அமைப்பாகக் கூடாது என்றும் அவர் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து பினராயி விஜயன் தமது முகநூல் பக்கத்தில் கூறியிருப்ப தாவது:

கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல்களில் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) செயல்படுத்தப் படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது ஜனநாயக செயல்முறைக்கு ஒரு சவாலாகும். "வாக்களிப்பதைப் போன்றது எதுவும் இல்லை, நான் நிச்சயமாக வாக்களிப்பேன்" (*'Nothing Like Voting, I Vote For sure'*) என்பது 2024 ஆம் ஆண்டு வாக்காளர் தினத்தின் செய்தி.

அது நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டது. அதைப் பிரச்சாரம் செய்தவர் களே, பீகாரில் 65 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கினர். குடிமக்கள் பதிவேட்டை குறுக்குவழியில் புகுத்துவதா? அரசியலமைப்புச் சட்டத்தின் 326 ஆவது பிரிவின் கீழ் குடிமக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டுள்ள உலகளாவிய வாக்களிக்கும் உரிமையை முழுமையாக மீறுவதாகும். ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை அரசியல் நலன்களின்படி பறிக்க முடியாது. எஸ்.ஐ.ஆர். செயல் முறை தேசிய குடிமக்கள் பதிவேட்டை குறுக்கு வழியாக செயல்படுத்தும் நோக்கம் கொண்டது என்ற கவலை இங்கு



வலுவடைந்து வருகிறது. எஸ்.ஐ.ஆர். மூலம் தங்களுக்கு ஏற்ற வகையில் வாக்காளர் பட்டியலை புதுப்பிக்க ஒன்றிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்ற விமர்சனம் எந்த வகையிலும் மறுக்கப் படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

**இவ்வளவு அவசரம் ஏன்?**

பீகார் எஸ்.ஐ.ஆர்.இன் அரசியலமைப்புச் சட்ட செல்லுபடித் தன்மை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தாலும், அதே செயல்முறையை மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்துவதை குற்றமற்றதாகக் கருத முடியாது. நீண்டகாலத் தயாரிப்பும் ஆலோசனைகளும் தேவைப்படும் வாக்காளர் பட்டியலின் சிறப்பு மற்றும் தீவிரமான திருத்தப் பணியானது, மக்களின் விருப்பத்தைத் தகர்க்கும் விதத்தில் அவசரகதியில் மேற்கொள்ளப்படுகிறது என்பது தெளிவாகிறது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950, மற்றும் வாக்காளர் பதிவுச் சட்டம் 1960 ஆகியவற்றின் படி, தற்போதுள்ள பட்டியலின் அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஆனால், தற்போதுள்ள வாக்காளர் பட்டியல்களுக்குப் பதிலாக 2002-2004 பட்டியலை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீவிர திருத்தத்தை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. கேரளத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் போது சிறப்பு தீவிர திருத்தம் சாத்தியமற்றது என்று மாநில தேர்தல் அதிகாரியே தெரிவித்திருந்தாலும், எஸ்.ஐ.ஆர். செயல்முறையை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்ற வலியுறுத்தல் தேர்தல் ஆணையத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**ஒன்றுபட்டுக் குரல் எழுப்புவோம்!**

தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பகத் தன்மையையே பாதிக்கும் இத்தகைய முடிவுகளில் இருந்து ஆணையம் விலக வேண்டும். தேர்தல் ஆணையம் போன்ற நிறு வனங்கள் ஒன்றியத்தில் ஆளும் கட்சி யின் கைப்பாவைகளாக மாற அனுமதிக்கக்கூடாது. எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய ஒரே மாநிலம் கேரளம். ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஆர்வமுள்ள அனைவரும் எஸ்.ஐ.ஆர். செயல்முறையின் இரண்டாம் கட்டத்திற்கு எதிராக ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும். இவ்வாறு கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

---

ஆளுங்கட்சியான பா,ஜ.க.வின்


# தீய சதித்திட்டத்துடன் செயல்படும் தேர்தல் ஆணையம்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி கடும் விமர்சனம்!

திருவனந்தபுரம், அக்.30 -

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு, அதன் செயல்பாடுகள் மீதான சந்தேகத்தை வலுப்படுத்துவதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர், தமது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்ப தாவது:



ஜனநாயக நடைமுறைகளுக்கு அப்பட்டமான அவமதிப்பு "12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங் களில் தேர்தல் ஆணையம் தன்னிச்சையாகவும் ஒருதலைப்பட்சமாகவும் சிறப்பு தீவிர திருத்தத்தை (SIR) அறிவித்திருப்பது மிகவும் ஆட்சேபனைக் குரியது. பீகாரில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்சநீதி மன்றம் விசாரித்து வரும்நிலையில், தேர்தல் ஆணையம் மேலும் பல மாநிலங்களில் அவசரமாக இந்தத் திருத்தத்தை மேற்கொள்வது, ஜனநாயக நடைமுறைகளை அவர்கள் அப்பட்டமாக அவமதிப்பதையே காட்டுகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறும் நிலையில், வாக்காளர் சிறப்பு தீவிர நடவடிக்கையை மேற்கொள்வதற்கு எதிரான ஒரு தீர்மானத்தை கேரள சட்ட மன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது. அதேபோல, வாக்காளர் சரிபார்ப்பு முகாம்கள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அனைத்தையும் தேர்தல் ஆணையம் புறக்கணித்த விதம், ஆளும் கட்சியின் கட்டளைப் படியும், தங்களுக்கு சாதகமாக வாக்காளர் பட்டியல்களை திருத்தம் செய்யும் ஆளும் கட்சியின் தீய சதித்திட்டத்தின் படியும் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன."

இவ்வாறு எம்.ஏ. பேபி தெரிவித்துள்ளார்.

---

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




---

# கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

சென்னை, அக்.30–

கழக துணை அமைப்பு செயலாளரும் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் தாயகம்கவி அவர்களின் தாயார் திருமதி.சௌந்தரி அம்மாள் (வயது 97) அவர்கள் 27.10.2025 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினார்.

மேலும் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினார்.

கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை பொது செயலாளர்கள் கே.என்.நேரு, ஆ.இராசா, க.கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் செல்வப் பெருந்தகை, புதுவை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா, தமிழ்நாடு அரசின் டெல்லி மேலிட சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தலைமை நிலைய நிர்வாகிகள் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, ஆஸ்டின், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, அறிவாலயம் மேலாளர் பத்மநாபன்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, வழக்கறிஞர் கிரிராஜன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் க.பொன்முடி, மாதவரம் சுதர்சனம், வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், பரந்தாமன், பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஜே. ஜே.எபினேசர், புதுக்கோட்டை முத்து ராஜா, பெரம்பலூர் பிரபாகரன், ஜெயங்கொண்டம் கா.சோ.க. கண்ணன், பூந்தமல்லி கிருஷ்ணசாமி, டாக்டர் நா.எழிலன், சிவிஎம்பி.எழிலரசன், ஜெ.கருணாநிதி, கே.எஸ்.ரவிசந்திரன், அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், பெரம்பலூர் முன்னாள் எம்.எல்.ஏ. ராஜ்குமார், முன்னாள் எம்.எல்.ஏ. கே.வி.சேகரன், தமிழ்நாடு பாடநூல் கழக நிறுவன தலைவர் திண்டுக்கல் லியோனி, சேந்தமங்கலம் எம்.எல்.ஏ. ஏ.ஜே.வெங்கடாசலம், மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வள்ளூர் எம்.எஸ்.ரமேஷ்ராஜ், முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இ.ஜி.சுகவனம், சுபாசந்திரசேகர், மடத்துக்குளம் ஜெயராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் குமரகுரு பரன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார்,

மண்டலக்குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், அம்பத்தூர் பி.கே. மூர்த்தி, சைதாப்பேட்டை எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், திருவொற்றியூர் தனியரசு, செய்தி தொடர்பு இணைசெயலாளர் தமிழன் பிரசன்னா, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் கவீகணேசன், வழக்கறிஞர் சரவணன், புனிதவதி எத்திராசன், பரிதி இளம் சுருதி, ராஜா அன்பழகன், மோகன் குமார், சங்கர் கணேஷ், தி.நகர் ஏழுமலை, கே.கே.நகர் கண்ணன், ரத்னா லோகேஸ்வரன், அம்பேத்வளவன், மற்றும் பகுதி கழக செயலாளர் தமிழ் வேந்தன், ஐசிஎப் முரளிதரன், வே.வாசு, புழல் நாராயணன், சேலம் ஏற்காடு ஒன்றிய செயலாளர் ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் குணசேகரன், வழக்கறிஞர் பாஸ்கர், மாவட்ட அமைப்பாளர் சிறும்பான்மை அணி சைதை சாதிக், கழக பேச்சாளர் சேலம் கோவிந்தன்,

இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பிரகாஷ், கோல்ட் பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், மதன் குமார், சேலம் சிவராமன், தகவல் தொழில்நுட்ப அணி மது, கும்மிடிபூணாடி மே.ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாதரபாக்கம் சந்திரமோகன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் ரமேஷ்குமார், திநகர் பகுதி இளைஞரணி அமைப்பாளர் உமா சங்கர்,

பொதுக்குழு உறுப்பினர்கள் பி.கே.துளசிங்கம், சைதை மா.அன்பரசன், கோசு மணி, வட்ட கழக செயலாளர்கள் திரு.வி.க நகர் பகுதி ருத்ர மூர்த்தி, பரிமளா சுரேஷ், எம்.ஏ.டிக்கா, எம்.இஸட். அபாய், தமீம், புல்லு சுரேஷ், புஷ்பராஜ், கிருஷ்ணகுமார், சன் டிவி வெங்கடேசன், பாபி தாஸ், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன்,

ஆலந்தூர் கே.ஆர்.ஜெகதீஸ்வரன், எம்.ஆர்.சீனிவாசன், வேலவன், சைதை பகுதி ந.தமிழரசு, கோதண்டம், நேரு நகர் பாட்ஷா, அ.வரதன்,

43 வட்ட செயலாளர் வழக்கறிஞர் பிரேம்ஆனந்த், வட்ட செயலாளர்கள் அதியமான், தவமணி, மேல்நிலைத் தேர்தல் பொறுப்பாளர்கள் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, சன் முனியாண்டி,

அணிகளின் மாநில துணை செயலாளர்கள் டாக்டர் புகழ் காந்தி, கண்ணிகை ஸ்டாலின், தென்றல்செல்வராஜ், ஈரோடு இறைவன், இறையன்பன் குத்தூஸ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி சி எச் சேகர், மருத்துவர் கோகுல், சென்னை வடகிழக்கு மாவட்டத்தை சார்ந்த நிர்வாகிகள் _ விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வை.மா.கண்ணதாசன், மாவட்ட பிரதிநிதி சந்திரகுமார், மாவட்ட பிரதிநிதி சைலேஷ், சுற்றுசூழல் அணி ஜெயசந்திரன், மாணவரணி துணை அமைப்பாளர் தினேஷ்வேலன், நெசவாளரணி அமைப்பாளர் ராயபுரம் கார்த்திக்செங்குட்டுவன், திருவொற்றி யூர் மே.பகுதி இளைஞரணி அமைப்பாளர் புழல் சரவணன், முன்னாள் ஒன்றிய செயலாளர் புழல் சரவணன், சோழவரம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன், பகுதி துணை அமைப்பாளர் சதீஷ்குமார், மாத்தூர் தாமரை செல்வன், வழக்கறிஞர் தமிழ்வேந்தன், இளைஞரணி துணை அமைப்பாளர் பொன் இளவரசன், புழல் ஒன்றிய சேர்மன் முருகன், மகளிரணி அமைப்பாளர் ராயபுரம் லஷ்மிவேல், மாணவரணி அமைப்பாளர் ஆர்.கே.நகர் சத்யா, அரசு வழக்கறிஞர்கள் புகழ் செந்தில், ஆர்த்தி, ஜெயபிரகாஷ், சுரேஷ், சி கதிரவன், நன்மாறன், த.பாபு, ராஜேஷ், வ.கனேசன், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்க செயலாளர் கிருஷ்ணகுமார், நூலகர் வழக்கறிஞர் ரகு, வழக்கறிஞர் அணி எம் ஜி மதிவாணன், பள்ளிக்கரணை சிவா, ஆர் முரளி, சைதை ஜெகதீசன், ரவி ராஜ், புவிந்தன், சாய்குணா, கணேஷ், துரைக்கண்ணன், அரவிந்த் ஸ்டீபன், மீஞ்சூர் சுரேஷ், பாஸ்கர், விழுப்புரம் கருணாகரன், கிருஷ்ணகிரி கிழக்கு ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் ரஜினிசெல்வம், தருமபுரி மாவட்டம் அரூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சந்திரமோகன், ஊத்தங்கரை மத்திய ஒன்றிய செயலாளர் செல்வம், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம் வெங்கடேசன் மற்றும் தஞ்சை பின்னையூர் கோவிந்தராஜ், பேட்ட வாய்தலை சண்முகம், எல்லாபுரம் ஒன்றிய செயலாளர் மூர்த்தி, திருப்பூர் தங்கராஜ், ஊடகவியலாளர்கள் சன் டிவி இ.வே.ரா.பெரியார், ஜி.ஜி.சிவா, சென்னை மாநகராட்சி டி.சி.ஒர்க்ஸ் துணை ஆனையர் சிவகிருஷ்ண மூர்த்தி, மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற்பொறியாளர் சரவணன், எஸ்.எஸ்.எல்.எப்.சக்திவேல்,

திரு வி க நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ந.துலுக்காணம், ராஜ் முஹம்மது, புல்லட் ரமேஷ், தில்லை கதிரவன், கேப்டன் ராஜன் கினார் ஆறுமுகம், லோகேஷ், எம் எஸ் சேகர், கருணாகரன், புரசை சீனிவாசன், பகுதி துணை செயலாளர் சுகுமார், எழுத்தாளர், ஆறுமுகம், பேங்க் தனசேகரன், இன்பசேகரன், ஆசை ராஜேந்திரன், சிவகுமார், எம் கே மகாதேவன், பி மோகன் சாக்ரடீஸ் பாபு ரமேஷ் ரிச்சர்ட் கதிர் சுரேஷ் ரமேஷ் ஜெகதீசன் பாஸ்கர் வேலு அஸ்வின் ரஞ்சித் இணையதள அணி வெங்கடேசன் ருக்கு உள்ளிட்ட பலரும் வருகை தந்து அஞ்சலி செலுத்தினர்.

ஏற்காடு சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆதிசங்கரன், ஜெரினா காடு குணசேகரன், கிளையூர் கிளை செயலாளர் குமார், ஏற்காடு மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசியர் சங்கம் மாணிக்கம், ஏற்காடு செல்வம், கழகத் துணை அமைப்பு செயலாளர் திரு வி க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், பேரவைத் தலைவர் அப்பாவு, வெள்ளகோயில் சாமிநாதன், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், ஆம்பூர் எம் எல் ஏ அ.செ.வில்வநாதன், தாம்பரம் எம்.எல்.ஏ.எஸ்.ஆர்.ராஜா, கே.வி.சேகரன், வழக்கறிஞர் அணி மாநில துணை அமைப்பாளர் கவிகணேசன் உள்ளிட்டோர் ஆறுதல் கூறினர்.



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, 177வது வார்டில் வட்ட கழக செயலாளர் ஜி.பி. எஸ்.பாலசதிஷ் தலைமையில் செல்லியம்மன் நகர், மகேஷ்வரி நகர், டான்சி நகர், தண்டீஸ்வரர் நகர், இளங்கோ தெரு, கம்பர் தெரு, பாரதி தெரு, பிள்ளையார் கோயில் தெரு, ஓராண்டியம்மன் தெரு ஆகிய இடங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீர் செய்வதற்கு வார்டு மாமன்ற உறுப்பினர், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் ஆய்வு மேற்கொண்டார். உடன் குடிநீர் வாரிய உதவி செயற்பொறியாளர், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், பணியாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் பங்கேற்றனர்.


நாள் : 30.10.2025
வியாழக்கிழமை
மாலை 4.00
மணியளவில்
இடம் :
தண்டையார்பேட்டை
மார்க்கெட்
(எல்லைமுத்தம்மன்
கோயில் அருகில்)





ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர்

வெ.சுந்தரராஜன்

அவர்களின்

4–ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் — சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்

வெ.சு.பிரபாகரன் ✣ வெ.சு.சத்தியநாராயணன்

ஆகியோரின் ஏற்பாட்டில்

நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள்

மதிப்புமிகு. ஆர்.எஸ்.பாரதி Ex.MP
கழக அமைப்புச் செயலாளர்

திரு. ஆர்.டி.சேகர் MLA
சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர்

டாக்டர் கலாநிதி வீராசாமி MP — கழக அயலக அணி தலைவர்
இரா.கிரிராஜன் MP — கழக சட்ட திட்ட திருத்தக் குழு செயலாளர்

ஜே.ஜே.எபினேசர் MLA — சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
ஐட்ரீம் ஆர்.மூர்த்தி MLA — தலைமை செயற்குழு உறுப்பினர்

தா.இளைய அருணா B.E., MC — தலைமை செயற்குழு உறுப்பினர்
இரா.செந்தில்குமார் D.M.E., — இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர்
வ.பெ.சுரேஷ் Ex.MC — இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர்

மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள்
மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துக்கொள்கின்றனர்.

நீங்கா நினைவுகளுடன்

கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி B.E., — மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்
நாட்டாமை கே.லட்சுமணன் — மாவட்ட பிரதிநிதி